உ

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
# திருச்செந்தூர்

ந.க.எண். 15851/2021-(1)/உ9 நாள்: 03-07-2021

## 1431-ம் பசலி திருக்கோயில் உபயோகத்திற்கு தேவையான பொருட்கள் கொள்முதல் - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இத்திருக்கோயிலுக்கு 1431-ஆம் பசலிக்கு (01-07-2021 முதல் 30-06-2022 முடிய) தேவைப்படும் சமயத்தில் கீழ்காணும் விவரப்படியான பொருட்களை உடனுக்குடன் எந்தவித குறைபாடும் இன்றி இத்திருக்கோயில் மத்தியப்பண்டகசாலையில் அல்லது திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் இடத்தில் கொண்டுவந்து வழங்குதல் வகைக்கு **தொகை நிர்ணயம் வழங்கிட கேட்டு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.**

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் கீழ்காணும் இனத்திற்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை ***"இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்"*** என்ற பெயரில் கேட்பு வரைவோலை (Demand Draft), ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தனி மற்றும் பொது நிபந்தனைகள் நன்கு தெரிந்து கீழ்காணும் எட்டு(8) இனத்திற்கு தனித்தனியே அரக்குமுத்திரை வைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி உறையின்மேல் இன்ன வகைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்று குறிப்பிடுவதுடன் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவரின் பெயர், முகவரியும் தெளிவாக எழுதி ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

1. **ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் நாள், கிழமை, நேரம்** - **23.07.2021 - வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி முடிய**
2. **ஒப்பந்தப்புள்ளிதிறக்கப்படும் நாள், கிழமை, நேரம்** - **23.07.2021 - வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணி**
3. **ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடைபெறும் இடம்** - **இணை ஆணையர் / செயல் அலுவலர் அலுவலகம்**

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி இனம் - 1 | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகை (வரைவோலையாக) ரூ. |
|---|---|---|
| 1. | திருக்கோயில் தினசரி மூலவர் அபிஷேக பொருட்கள் சப்ளை செய்யும் உரிமம் (திருக்கோயில் தேவைக்கேற்ப) | 500/- |

### திருக்கோயில் தினசரி மூலவர் அபிஷேக பொருட்கள் சப்ளை செய்யும் உரிமம் சப்ளை செய்யப்பட வேண்டிய அபிஷேக பொருட்கள்

| வ. எண் | தேவையான பொருள் | அளவு விபரம் |
|---|---|---|
| 1. | சந்தனாதி தைலம் | 100 மி.லி. |
| 2. | பிரசாத தட்டு(எவர்சில்வர்)<br>தாம்பாளம் எடை கிராம் 420<br>சுற்றளவு 35 செ.மீ | 2 க்கு |
| 3. | சுத்தமான பசும்பால் | 5 லிட்டர் |
| 4. | தயிர் | 2 லிட்டர் |
| 5. | நயம் 1ம் எண் விபூதி | 2 படிக்கு |
| 6. | பூமாலை | 1 க்கு |

<u>தனி நிபந்தனைகள்</u>

1.அபிஷேக பொருட்கள் சுத்தமானதாகவும், கலப்படம் இல்லாமலும் வழங்கப்பட வேண்டும்.
2.குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக சப்ளை செய்திட வேண்டும்.
3.குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தக்காரர்கள் வைப்புத் தொகை நீங்கலாக இதர ஒப்பந்தக்காரர்களுக்கு வைப்புத் தொகை உடன் வழங்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி தக்கார் தீர்மானம் அங்கீகாரம் மற்றும் ஆணையர் அங்கீகாரத்திற்குட்பட்டு முடிவு செய்யப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளி திறந்து முடிவு செய்த பின் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
6.அனைத்து வரிகள் உட்பட மொத்ததொகை குறிப்பிட பட வேண்டும்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி இனம் - 2 | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகை (வரைவோலையாக) ரூ. |
|---|---|---|
| 2. | திருக்கோயில் தங்கரதம் உலா உபயதாரருக்கு வழங்கும் வகைக்கு 5கிராம் எடை கொண்ட வெள்ளி டாலர்கள் சப்ளை செய்யும் உரிமம். (திருக்கோயில் தேவைக்கேற்ப) | 5000/- |

திருக்கோயில் தங்கரதம் உலா உபயதாரருக்கு வழங்கும் வகைக்கு 5-கிராம் எடை கொண்ட வெள்ளி டாலர்கள் சப்ளை செய்யும் உரிமம்.

| தேவையான இனம் | அளவு விபரம் | விலை விபரம் ரூ |
|---|---|---|
| முன்பக்கம் ஜெயந்திநாதர் படம் பின்பக்கம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ”தங்கத்தேர் உலா” என எழுத்து பொறித்த வெள்ளி டாலர் சப்ளை | 5 கிராம் (எண்ணம் 1க்கு கிரையம்) | |

<u>தனி நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தப்புள்ளிதாரர் சப்ளை செய்யும் மேற்படி இனங்கள் தரமானதாகவும், எடை சரியான அளவாகவும் இருக்க வேண்டும்.
2. மேற்படி இனங்கள் சப்ளை செய்வதில் குறைபாடு இருப்பின் அதற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்
3. மேற்படி இனங்களுக்கு உரிய தேவைப்பட்டியல் அனுப்பியவுடன் சப்ளை செய்ய வேண்டும்.
4. அனைத்து வரிகள் உட்பட மொத்ததொகை குறிப்பிட பட வேண்டும்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி இனம் - 3 | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகை (வரைவோலையாக) ரூ. |
|---|---|---|
| 3. | திருக்கோயிலில் பக்தர்களுக்கு விற்பனை செய்வதற்கு சண்முகர், மூலவர் திருஉருவம் பதித்த பிளாஸ்டிக் தங்க டாலர்கள், மோதிரங்கள் மற்றும் வெள்ளி டாலர்கள் சப்ளை செய்யும் உரிமம் (திருக்கோயில் தேவைக்கேற்ப) | 5000/- |

**திருக்கோயிலில் பக்தர்களுக்கு விற்பனை செய்வதற்கு சண்முகர், மூலவர் திருஉருவம் பதித்த பிளாஸ்டிக் தங்க டாலர்கள், மோதிரங்கள் மற்றும் வெள்ளி டாலர்கள் சப்ளை செய்யும் உரிமம்**

| வ. எண் | தேவையான இனங்களின் விபரம் | எண்ணம் 1க்கு கிரையம் |
|---|---|---|
| 1. | பிளாஸ்டிக் தங்க டாலர் மூலவர் | |
| 2. | பிளாஸ்டிக் தங்க டாலர் சண்முகர் | |
| 3. | பிளாஸ்டிக் தங்க மோதிரம் மூலவர் – சாதா | |
| 4. | பிளாஸ்டிக் தங்க மோதிரம் சண்முகர் – சாதா | |
| 5. | பிளாஸ்டிக் தங்க மோதிரம் மூலவர் (பார்டர் போட்டது) | |
| 6. | பிளாஸ்டிக் தங்க மோதிரம் சண்முகர் (பார்டர் போட்டது) | |
| 7. | வெள்ளி டாலர் 2 1/2 கிராம் எடையில் மூலவர் | |
| 8. | வெள்ளி டாலர் 2 1/2 கிராம் எடையில் சண்முகர் | |
| 9. | வெள்ளி டாலர் 5 கிராம் எடையில் மூலவர் | |
| 10. | வெள்ளி டாலர் 5 கிராம் எடையில் சண்முகர் | |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி இனம் - 4 | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகை (வரைவோலையாக) ரூ. |
|---|---|---|
| 4. | திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் நடைபெறும் திருவிழாக் காலங்கள் மற்றும் திருக்கோயில் முக்கிய நிகழ்வுகள் மற்றும் உண்டியல் திறப்பினை புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கும் உரிமம் (திருக்கோயில் தேவைக்கேற்ப) | 5000/- |

**திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் நடைபெறும் திருவிழாக் காலங்கள் மற்றும் திருக்கோயில் முக்கிய நிகழ்வுகள் மற்றும் உண்டியல் திறப்பினை புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கும் உரிமம்**

| வ. எண். | இனங்களின் விபரம் | விலை விபரம் |
|---|---|---|
| 1. | 6" x 4" புகைப்படம் எண்ணம் 1க்கு | |
| 2. | 8" x 6" புகைப்படம் எண்ணம் 1க்கு | |
| 3. | 8" x 12" புகைப்படம் எண்ணம் 1க்கு | |
| 4. | 10" x 12" புகைப்படம் எண்ணம் 1க்கு | |
| 5. | திருக்கோயில் உண்டியல் திறப்பு, முக்கிய நிகழ்வுகள் மற்றும் விஷேச நாட்களில் வீடியோ எடுத்து குறுத்தகட்டில் பதிவு செய்து வழங்கும் வகைக்கு. ( 6 மணி நேரத்திற்கு) (மொத்த தொகை குறிப்பிட வேண்டும்) | |
| 6. | திருக்கோயில் உண்டியல் திறப்பு முக்கிய நிகழ்வுகள் மற்றும் விஷேச நாட்களில் வீடியோ எடுத்து குறுந்தகட்டில் பதிவு செய்து வழங்கும் வகைக்கு. ( 3 மணி நேரத்திற்கு) (மொத்த தொகை குறிப்பிட வேண்டும்) | |
| 7. | உண்டியல் திறப்பினை வீடியோ எடுத்து குறுந்தகட்டில் பதிவு செய்து வழங்கும் வகைக்கு (நாள்1க்கு)(மொத்த தொகை குறிப்பிட வேண்டும்) | |

<u>தனி நிபந்தனைகள்</u>

1. புகைப்படம் எடுத்து வழங்குவதற்கு விலை விபரம் குறிப்பிட வேண்டும்.
2. மேற்படி பணிகளை உரிய காலத்திற்குள் செய்ய தவறினால் வேறு நிறுவனங்கள் மூலம் செய்யப்படும். இதனால் ஏற்படும் இழப்பு தொகையினை பொறுப்பான ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.
3. மேற்படி இனங்களுக்கு உரிய தேவைப்பட்டியல் அனுப்பியவுடன் சப்ளை செய்ய வேண்டும்.
4. புகைப்படம் அல்லது வீடியோவில் சேதாரம் இருந்தால் உடனடியாக ஒப்பந்தப்புள்ளிதாரர் செலவில் எடுத்துக்கொண்டு புதிய படங்கள்அல்லது வீடியோ நகல் வழங்க வேண்டும்..
6. ஒப்பந்தப்புள்ளி தக்கார் தீர்மானம் அங்கீகாரம் மற்றும் ஆணையர் அங்கீகாரத்திற்குட்பட்டுமுடிவு செய்யப்படும்.
7.அனைத்து வரிகள் உட்பட மொத்ததொகை குறிப்பிடப்பட வேண்டும்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி இனம் - 5 | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகை (வரைவோலையாக) ரூ. |
|---|---|---|
| 5. | திருக்கோயில் கட்டணச்சீட்டு விற்பனைக்கு பயன்படுத்தப்படும் கையடக்க கணிணி கருவி உபயோகத்திற்கு தேவையான 2inch , 3inch தெர்மல் பேப்பர் ரோல் மற்றும் பல வண்ணங்கள் கொண்ட கட்டண கணிணி ரசீது சப்ளை செய்யும் உரிமம் (திருக்கோயில் தேவைக்கேற்ப) | 2000/- |

**திருக்கோயில் கட்டணச்சீட்டு விற்பனைக்கு பயன்படுத்தப்படும் கையடக்க கணிணி கருவி உபயோகத்திற்கு தேவையான 2inch , 3inch தெர்மல் பேப்பர் ரோல் மற்றும் பல வண்ணங்கள் கொண்ட கட்டண கணிணி ரசீது சப்ளை செய்யும் உரிமம்**

| வ. எண். | எனங்களின் விபரம் | விலை விபரம் |
|---|---|---|
| 1. | 2 inch 15 மீட்டர் தெர்மல் பேப்பர் ரோல் ஒன்றின் விலை | |
| 2. | 2 inch 15 மீட்டர் தெர்மல் கலர் பேப்பர் ரோல் ஒன்றின் விலை | |
| 3. | 3 inch 50 மீட்டர் தெர்மல் பேப்பர் ரோல் ஒன்றின் விலை | |
| 4 | 3 inch 50 மீட்டர் தெர்மல் கலர் பேப்பர் ரோல் ஒன்றின் விலை | |
| 5. | பல வண்ணங்கள் கொண்ட கட்டண கணிணி ரசீது ( 210mm ×297mm) ஒன்றின் விலை. | |

<u>தனி நிபந்தனைகள்</u>

1. பேப்பர் ரோல் ஒன்றின் விலை விபரம் குறிப்பிட வேண்டும்.
2. மேற்படி இனங்களுக்கு உரிய தேவைப்பட்டியல் அனுப்பியவுடன் சப்ளை செய்ய வேண்டும்.
3. மேற்படி பேப்பர் ரோல் சப்ளை உரிய காலத்திற்குள் செய்ய தவறினால் வேறு நிறுவனங்கள் மூலம் செய்யப்படும். இதனால் ஏற்படும் இழப்பு தொகையினை பொறுப்பான ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.
4. மேற்படி பேப்பர் ரோல்கள் சேதாரம் இருந்தால் உடனடியாக ஒப்பந்தப்புள்ளிதாரர் புதிய தரமான பேப்பர் ரோல் மாற்றி சப்ளை சேய்ய வேண்டும்.
5. மேற்படி பேப்பர் ரோல்கள் தரமானதாக இருக்க வேண்டும். தரத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பின் தங்களின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும் மற்றும் அதற்குரிய இழப்பு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளிதாரரே பொறுப்பாக்கப்படுவார்.
6. தெர்மல் பேப்பர், கட்டண கணிணி ரசீது மாதிரியை, திருக்கோயில் அலுவலகத்தில் காண்பித்து சரிபார்த்து, ஒப்புதல் பெற்ற பின்னரே அவைகளை உரிய காலத்திற்குள் டென்டர்தாரரின் சொந்த பொறுப்பில் திருக்கோயில் அலுவலகத்தில் கொண்டு வந்து ஒப்படைத்து ஒப்புதல் பெற வேண்டும். டென்டர் நிபந்தனையின்படி தெர்மல் பேப்பர் ரோல் மற்றும் கட்டண கணிணி ரசீது ஒப்படைத்தப்பின் அதில் ஏதாவது குறை காணப்பட்டால் அதனை டென்டர்தாரர் தனது சொந்த பொறுப்பில் சரிசெய்து குறை ஏதுமின்றி ஒப்படைக்க வேண்டும்.
7. ஒப்பந்தப்புள்ளி தக்கார் தீர்மானம் அங்கீகாரம் மற்றும் ஆணையர் அங்கீகாரத்திற்குட்பட்டு முடிவு செய்யப்படும்.

6.அனைத்து வரிகள் உட்பட மொத்ததொகை குறிப்பிட பட வேண்டும்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி இனம் - 6 | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகை (வரைவோலையாக) ரூ. |
|---|---|---|
| 6. | திருக்கோயில கணினி பிரிண்டர்களுக்கு இங்க் நிரப்பி கொடுத்தல் மற்றும் டோனர்களை ரீ கண்டிசன் செய்து கொடுக்கும் பணி (திருக்கோயில் தேவைக்கேற்ப) | 2000/- |

**திருக்கோயில் கணினி பிரிண்டர்களுக்கு இங்க் நிரப்பி கொடுத்தல் மற்றும் டோனர்களை ரீ கண்டிசன் செய்து கொடுக்கும் பணி**

| வ.எண். | எனங்களின் விபரம் | விலை விபரம் |
|---|---|---|
| 1. | **கணினி பிரிண்டருக்கு இங்க் நிரப்பி கொடுத்தல் ஒன்றின் விலை** | |
| 2. | **கணினியின் காட்ரேஜ் புதிதாக மாற்றுதல் ஒன்றின் விலை.** | |

<u>தனி நிபந்தனைகள்</u>

1.பிரிண்டர்களுக்கு இங்க் நிரப்ப இத்திருக்கோயில் தேவைக்கேற்ப கணினிமேற்பார்வையாளர் முன்னிலையில் இங்க் நிரப்ப வேண்டும்.

2. தேவையெனில் காட்ரேஜ் புதிதாக மாற்ற வேண்டும்.

3. தேவையெனில், இதர உதிரி பாகங்களை மாற்றிக்கொடுக்க வேண்டும்.

4. பின்னர் உரிய பட்டியலில் சான்று பெற்று, அலுவலகத்தில் சமர்ப்பித்து தொகை பெற்றுக்கொள்ளவேண்டும்.

5.அனைத்து வரிகள் உட்பட மொத்ததொகை குறிப்பிடப்பட வெண்டும்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி இனம் - 7 | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகை (வரைவோலையாக) ரூ. |
|---|---|---|
| 7. | திருக்கோயில் முடிகாணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு மழித்தல்தகடு(பிளேடு) (திருக்கோயில் தேவைக்கேற்ப) | 5000/- |

**திருக்கோயில் முடிகாணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு மழித்தல்தகடு(பிளேடு)சப்ளை செய்யும் உரிமம்**

| வ. எண் | தேவையான பொருள் | எண்ணம் | விலை விபரம் |
|---|---|---|---|
| 1. | **மழித்தல்தகடு (சூப்பர் மேக்ஸ் பிளேடு முதல் தரம்)** | **1** | |

<u>தனி நிபந்தனைகள்</u>

1. மழித்தல் தகடுகள் ஒரு எண்ணத்திற்குரிய விலை விபரம் மற்றும் தரம் விபரம் குறிப்பிட வேண்டும்

2.மழித்தல் தகடுகள் ISI சான்று மற்றும் சூப்பர் மேக்ஸ் முதல் தரமாக இருக்க வேண்டும்

3.மழித்தல் தகடுகளில் சேதாரம் இருந்தாலோ, வெற்று பாக்கெட்டாக இருந்தாலோ உடனடியாக ஒப்பந்தப்புள்ளிதாரர் சொந்த செலவில் எடுத்துக்கொண்டு புதிய தகடுகள் வழங்க வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி தக்கார் தீர்மானம் அங்கீகாரம் மற்றும் ஆணையர் அங்கீகாரத்திற்குட்பட்டு முடிவு செய்யப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளி திறந்து முடிவு செய்த பின் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6.அனைத்து வரிகள் உட்பட மொத்ததொகை குறிப்பிடப்பட வேண்டும்.

## ஒப்பந்துபுள்ளி இனம் - 8

| வ.எண். | விபரங்கள் | ஒப்பந்தப்புள்ளி காப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் கிரையம் ரூ. | ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கும் காலம். |
|---|---|---|---|---|
| 8. | இத்திருக்கோயிலுக்கு 1431-ம் பசலிக்கு தேவைப்படும் படிவங்கள், இரசீதுகள் மற்றும் பதிவேடுகள் (ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் கண்டபடி)அச்சிட்டு வழங்குதல் இதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவத்திற்குரிய கட்டணம் ரூ.840/- செலுத்தி படிவம் பெற்றுக்கொள்ளலாம். | ரூ10,000/- | ரூ750+12% GST | 16.07.2021 முதல் 22.07.2021 மாலை 5.30 மணி வரை ஒப்பந்தப்புள்ளி படிவம் கொடுக்கப்படும் (அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மட்டும்) |

<u>ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை செலுத்தாமல் கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. இதற்கு முன் இத்திருக்கோயிலில் ஒப்பந்தம் எடுத்து ஒப்பந்தப்படி சாமான்கள் சப்ளை செய்ய தவறியவர்கள் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

3. ஒருவர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி சாதகமாக இருந்தபோதிலும் மேற்படியார் முழுமையாக சப்ளை செய்யமாட்டார் என்று நிர்வாக அதிகாரி அவர்கள் கருதினாலும் அல்லது வேறு காரணங்களுக்காகவும் நிர்வாக நலன் கருதி மேற்படியாரது ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்க ஆலய நிர்வாகத்திற்கு பூரண உரிமையுண்டு. இதை ஆட்சேபிக்க எவ்வித உரிமையும் கிடையாது.

4. காரணம் கூறியோ கூறாமலோ ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்வது நிராகரிப்பது அல்லது வேறு ஒப்பந்தப்புள்ளி கேட்பது போன்ற சகல உரிமையும் நிர்வாகத்திற்கு உண்டு திருக்கோயிலுக்கு பாக்கி வைத்திருப்பவர்கள் திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

5. ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலைய சட்ட விதிமுறைகளின்படி தக்கார் மற்றும் ஆணையரது அங்கீகாரத்திற்கு உட்பட்டு முடிவு செய்யப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளி உறுதி உத்தரவு கிடைத்தவுடன் ஒருவாரத்திற்குள் திருக்கோயிலிருந்து கொடுக்கும் மாதிரிப்படி ரூ.20 மதிப்புள்ள அரசு முத்திரை காகிதத்தில் ஒரு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். இதில் தவறினால் மேற்படியார் செலுத்திய வைப்புத்தொகையை இழந்துவிடுவதுமின்றி ஒப்பந்தப்புள்ளி உறுதி உத்தரவையும் இரத்துசெய்து மறு ஒப்பந்தப்புள்ளி கேட்டு முடிவு செய்யப்படும். இதனால் ஏற்படும் செலவு குறைவு முதலிய சகல நஷ்டங்களையும் முதலில் ஒப்பந்தப்புள்ளி உறுதி உத்தரவு பெற்றவரிடம் வசூல் செய்ய நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு. ஒருக்கால் ஆதாயம் ஏற்பட்டால் அதில் முதல் உறுதி உத்தரவு பெற்ற அவருக்கு உரிமை கிடையாது.

7. ஒப்பந்தப்புள்ளி உறுதிஉத்தரவு அனுப்பப்படும் முன்பு ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவருக்கு எவ்வித அறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்யவும் அல்லது வேறு நடவடிக்கை எடுக்கவும் நிர்வாக அதிகாரிக்கு உரிமையுண்டு.

8. ஒப்பந்தப்புள்ளி உறுதி உத்தரவு பெற்றவர் தமிழ் நாடு இந்து சமய அறநிலைய துறை சட்டதிட்டங்களுக்கும் விதிகளுக்கும் உத்தரவுக்கும் உட்பட்டு நடந்துகொள்ளவேண்டும்.

9. ஒப்பந்தப்புள்ளி உறுதி உத்தரவு பெற்றவர் நிர்வாக அதிகாரியின் எழுத்து மூலமாக அனுமதியின்றி எக்காரணத்தை முன்னிட்டும் ஒப்பந்தத்தை வெறு நபருக்கு மாற்றிக் கொடுக்கவோ, உள் காண்டிராக்ட் விடவோ அல்லது ஒப்பந்தத்திலிருந்து விடுவித்துக் கொள்ளவோ உரிமை கிடையாது.

10. ஒப்பந்தப்புள்ளி உறுதி உத்தரவு பெற்றவர் முன்கூட்டியே தேவை விபரம் தெரிந்து ஒவ்வொரு மாதமும் திருக்கோயில் தேவைக்குத் தக்கவாறு மேலே குறித்த சாமான்களை நல்ல தரமுள்ளவைகளாகவும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்ட நிர்ணய அளவுகளின்படியும் எவ்வித அட்டி ஆவலாதியுமின்றி உரிய காலக்கெடுவுக்குள் முன்கூட்டியே சப்ளை செய்தும் வேலைகளை திருக்கோயில் நிர்வாக நலனுக்கும் காரியங்களுக்கும் இடையூறுமின்றி அட்டி ஆவலாதி ஏற்படாமல் வேலை ஒப்பந்தத்தையும் நிறைவேற்ற வேண்டும். தவறினால் எவ்வித அறிவிப்புமின்றி அடுத்த வேறு மாற்று ஏற்பாடுகள் செய்ய நிர்வாக அதிகாரிக்கு உரிமையுண்டு. இதில் ஏற்படும் அசல் செலவு நஷ்டங்களுக்கும் சிரமத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவரே திருக்கோயிலுக்கு ஈடுசெய்ய வேண்டும்.

11. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பெற ஒப்பந்தக்காரர் TIN எண் PAN எண்பெற்றிருக்க வேண்டும்.

12. தன்பெயரில் PAN இல்லாத நபர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படமாட்டாது

13. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் விபரம் முழுவதும் மற்றும் நிபந்தனைகளையும் தெரிந்தே ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்தபின் கூறப்படும் எவ்வித ஆலோசனையும் ஆட்சேபனையும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

14. மேலே கண்ட நிபந்தனைகளில் எதில் தவறினாலும் உடன் ஒப்பந்தப்புள்ளி உறுதி உத்தரவு இரத்து செய்து கிரமப்படி நடவடிக்கைகளை எடுக்கவும் அதில் ஏற்படும் குறைவு நஷ்டம் செலவு முதலியவற்றை முதல் உறுதி உத்தரவு பெற்றவரிடமிருந்து வசூல் செய்துகொள்ளவும் நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் உண்டு. இதை ஆட்சேபிக்க ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவருக்கு உரிமை கிடையாது.

15. மூடி முத்திரையிடப்படாமலும் உறையின்மேல் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் முழு முகவரி முதலியன குறிப்பிடப்படாமலும் உரிய நேரத்தில் தராத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

16. மற்றும் இத்திருக்கோயில் பழக்க வழக்கப்படியுள்ள எல்லா நிபந்தனை களுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

17. ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் கோரப்படாத இனங்களை அச்சிடவரும் உத்தரவு வழங்கப்பட்டால் ஒப்பந்தக்காரர் அதே அளவுகளில் இனம் அச்சிடுவதற்கு கொடுக்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்குரிய தொகையை வழங்கப்படும்.

18. கட்டணச் சீட்டுகள். படிவங்கள், புத்ததகங்களை இத்திருக்கோயிலால் வழங்கப் படும் தேவைப்பட்டியல்படி அவ்வப்பொழுது உடனுக்குடன் அச்சிட்டு ஒருவார காலத்திற்குள் வழங்க வேண்டும். இதில் காலதாமதம் ஏதும் செய்தல் கூடாது.

19. மேற்படி சப்ளை இனத்திற்கு வருமான வரி விதிகளின்படி கணக்கிட்டு செலுத்தவேண்டும்.

| | ஒப்பந்தப்புள்ளி ___ பொது நிபந்தனைகள் |
|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள், தமிழ்நாடு, இந்து சமய அறநிலையத்துறை சட்ட திட்டங்களுக்கும், விதிகளுக்கும் உட்பட்டு கலந்து கொள்ள வேண்டும். |
| 2. | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளின்படி நடத்தப்படும். இந்த விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்வது அறநிலையத்துறை ஆணையர் மறுப்பாணை அதிகாரத்திற்குட்பட்டது. |
| 3. | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் அறிவிப்பில் கண்டுள்ளபடி ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொள்ள வேண்டும். முன்வைப்புத் தொகை செலுத்தாதவர்கள் கண்டிப்பாக ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் ஒரு இனத்துக்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகையை வைத்து இதர இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. |
| 4. | ஒவ்வொரு இனம் ஒப்பந்தப்புள்ளியின்போது, அந்த ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த நபர்கள் மட்டுமே ஒப்பந்தபுள்ளி திறப்பு நடக்கும் இடத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள். |
| 5. | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் ஆஜராக தவறினால் இணை ஆணையர்/செயல் அலுவலரால் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படும். அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையே உறுதி செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்தபின் குறைந்த தொகைக்கு கேட்டவருடைய முன்வைப்பு தொகையை திருக்கோயில் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளப்படும். உரிம காலம் முடிந்த பின்பு முன்வைப்பு தொகை திரும்ப வழங்கப்படும் மேற்படி தொகைக்கு எவ்வித வட்டியும் கிடையாது. |
| 6. | உரிமக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக காரணம் எதுவும் சொல்லாமல் நிபந்தனைகளை கூட்டவும், குறைக்கவும் அல்லது மாறுதல் செய்யவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு. |
| 7. | காரணம் கூறாமல் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையை நிறுத்தி வைக்கவோ அல்லது ஒத்திவைக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு. |
| 8. | ஒப்பந்தப்புள்ளி உறுதி உத்தரவு கிடைத்த ஒரு வார காலத்திற்குள் கூடுதல் வைப்பு தொகை செலுத்தி திருக்கோயிலில் இருந்து கொடுக்கும் மாதிரிப்படி ரூ.20/- மதிப்புள்ள அரசு முத்திரைக் காகிதத்தில் ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும். தேவையெனில் தமது பொறுப்பில் பதிவு செய்து கொடுக்க வேண்டும். |
| 9. | ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அவ்வுரிமையை மாற்றம் செய்யவோ அல்லது பினாமியாக நடத்தவோ உரிமை கிடையாது. மேலும் தன் விருப்பப்படி உரிம காலத்திலிருந்து விடுபடவும் உரிமை இல்லை. |
| 10. | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் ஒப்பந்தப்புள்ளி குறித்த முழு விவரங்களும், நிபந்தனைகளும் தெரிந்தே கலந்து கொண்டதாகவே கருதப்படுவார்கள். ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவு செய்த பின்பு கூறும் எவ்வித ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| 11. | ஒப்பந்தப்புள்ளி இனங்களுக்கு விற்பனை வரி, சேவை வரி மற்றும் வருமான வரி மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய இதர வரிகள் அனைத்தும் நடைமுறை விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு கணக்கிட்டு உரிமதாரர் தமது சொந்த பொறுப்பில் செலுத்த வேண்டும். |
| 12. | திருக்கோயில் நலனுக்கு எதிராகச் செயல்பட்டவர்களும் செயல்படுவதாக கருதப்படுவர்களும், திருக்கோயில் பாக்கிக்காக தீர்ப்புகடனாளி என்று அறிவிக்கப்பட்டவரும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். |
| 13. | ஒப்பந்தப்புள்ளி ஒப்படைக்கும் கவரில் மேல் உறையில் சப்ளை செய்யும் இனத்தில் பெயர் குறிப்பிட வேண்டும். |
| 14. | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் இந்து சமயத்தவராக இருக்க வேண்டும். |
| 15. | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் தொற்றுநோய் உள்ளவர்களாக இருக்க கூடாது. |

| | |
|---|---|
| 16. | ஒப்பந்தப்புள்ளி உரிம காலத்தில் நிபந்தனைகளை செயல்படுத்த முடியாது போனால் மேற்படியார் வாரிசுகளே நிபந்தனைகளை நிறைவேற்ற கடமைப்பட்டவராவார். ஆனால் ஒப்பந்தப்புள்ளி உரிமத்தினை திருக்கோயில் நிர்வாகம் நிறுத்தம் செய்ய நினைத்தால் வாரிசுதாரர்கட்கு ஒப்பந்தப்புள்ளி பாத்தியதை இல்லை. புதிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு வேறு நபருக்கு உறுதி செய்ய நிர்வாகத்திற்கு உரிமை உண்டு. |
| 17. | ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவர் தானாக முன்வந்து உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய நேர்ந்தால் முன்வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். மறு ஒப்பந்தப்புள்ளியில் நசஷ்டம் ஏற்பட்டால் முன் உரிமதாரரே இதற்கு முழு பொறுப்பு ஆவார். ஆனால் திருக்கோயிலுக்கு லாபம் ஏற்பட்டால் அதில் யாதொரு உரிமையும் கிடையாது. |
| 18. | ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவர் மேற்படி நிபந்தனைகளுக்கும், மேலும் இத்திருக்கோயிலில் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் இதர நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்துகொள்ள வேண்டும். |
| 19. | ஒருவர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயிலுக்கு சாதகமாக இருந்தபோதிலும், மேற்படியார் ஒழுங்காக பொருட்கள் வழங்க மாட்டார் எனவும், ஒப்பந்த வேலைகள் சரியாக செய்யமாட்டாரென்று திருக்கோயில் நிர்வாகம் கருதினால் மேற்படியாரது ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமையுண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது. |
| 20. | இத்திருக்கோயில் பழக்க வழக்கப்படியுள்ள எல்லா நிபந்தனைக்கும் உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி குறித்து விவரங்கள் ஏதும் தேவையெனில், அலுவலக வேலை நாட்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். |
| 21. | ஒப்பந்தப்புள்ளி கால வரம்பு 1431 ஆம் பசலிக்கு மட்டும் என குறிப்பிட்டிருந்தாலும், திருக்கோயில் நிர்வாகம் விரும்பினால், ஒப்பந்தக்கால வரம்பை கூட்டவோ, அல்லது குறைக்கவோ உரிமையுண்டு. |
| 22. | இதர நிபந்தனைகள் ஏதும் இருந்தால் அதை ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்வதற்கு முன் அறிவிக்கப்படும். |
| 23. | ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவரின் ஒவ்வொரு பட்டியல் தொகையிலும் வருமான வரி பிடித்தம் செய்யப்படும். மேலும் இதர ஒப்பந்த வேலைகளுக்கு வருமான வரித்துறை நிர்ணய விகிதப்படி வரி பிடித்தம் செய்யப்படும். |
| 24. | ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவர் நிரந்தர கணக்கு எண் (PAN CARD) பெற்று இருக்க வேண்டும். |

இரா.கண்ணன்ஆதித்தன் .,M.S(USA)
தக்கார்

ம.அன்புமணி, எம்.ஏ.,,பி.எல்.,
இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி (கூ.பொ.)